International Association of Oil & Gas Producers

வேலை தொடங்கும் முன் சரிபார்ப்பு - SWC

நகரும் வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் அருகில் வேலை செய்யும் பணி (Work Around Mobile Equipment)

எப்போது முடிக்க வேண்டும் - நகரும் வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் அருகில் வேலை செய்யும் பணி தொடங்குவதற்கு முன்பு

தொடங்குவதற்கு முன் கீழே உள்ள ஒவ்வொரு கட்டுப்பாடும்/ பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவும் வேலை		ஒவ்வொரு கட்டுப்பாடு / பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கான வழிகாட்டுதல்	பணியைச் செய்யும் நபர்(கள்)	வேலை தொடக்க சரிபார்ப்பாளர்
நான் உறுதிப்படுத்தியுள்ளேன்:				
1	**பணியிடத்தில் நகரும் உபகரணங்களுக்கான நிறுத்தும் இடங்கள் மற்றும் செல்லும் பாதைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.**	• நகரும் உபகரணங்களுக்கு: – ஒதுக்கப்பட்ட நிறுத்துமிடம் (Parking Area) உள்ளது. – இரவு நேரம் அல்லது குறைந்த பார்வை நிலைகளில் இயக்குவதற்கு தேவையான விளக்குகள் (Lighting) உள்ளன. – பக்கவாட்டு மற்றும் மேல்புற பாதுகாப்பு இடைவெளி (Clearance) உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. – வேக வரம்புகள் (Speed Limits) தெளிவாக குறிப்பிடப்பட்டு, கடைபிடிக்கப்படுகின்றன.		
2	**நகரும் உபகரணங்கள் அருகில் பணியாளர்கள் செல்லாதபடி தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.**	• பணியாளர்கள் மற்றும் நகரும் உபகரணங்கள் நேரடியாக சந்திக்கும் வாய்ப்பு நீக்கப்பட்டுள்ளதோ அல்லது குறைக்கப்பட்டுள்ளதோ உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக: – பணியாளர்கள் நடந்து செல்ல தனி பாதைகள் (Walkways) அமைக்கப்பட்டுள்ளன. – பணியாளர்களையும் நகரும் உபகரணங்கள் செல்லும் பாதைகளையும் பிரிக்க எச்சரிக்கை பலகைகள் மற்றும் தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. – பணியாளர்கள் சாலை அல்லது பாதையை கடக்க வேண்டிய இடங்கள் தெளிவாக குறிக்கப்பட்டுள்ளன.		
3	**நகரும் உபகரணங்கள் பயன்படுத்தும் முன் பரிசோதிக்கப்பட்டுள்ளன.**	• பணியிடத்திற்கு கொண்டு வருவதற்கு முன்பும், குறிப்பிட்ட இடைவெளியிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில்: – எண்ணெய் அல்லது திரவ கசிவுகள் உள்ளனவா – சேதம் உள்ளதா – பிரேக் (Brake) சரியாக செயல்படுகிறதா என்பன சரிபார்க்கப்பட்டுள்ளன. • எச்சரிக்கை அலாரம், இருக்கை (Seat) மற்றும் பின்நோக்கி செல்லும் அலாரம் (Backup Alarm) போன்ற பாதுகாப்பு சாதனங்கள் சரியாக செயல்படுகின்றன. • பழுதான உபகரணங்கள் அடையாளம் காட்டப்பட்டு (Tag), பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டுள்ளன.		
4	**உபகரணம், சுமை (Load) மற்றும் தரையின் நிலைத்தன்மை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.**	• எதிர்பாராத நகர்வு அல்லது சரிவு ஏற்படும் வாய்ப்பு உள்ளதா என்பது சரிபார்க்கப்பட்டுள்ளது. பின்வரும் அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன: – சுமை பாதுகாப்பாக கட்டப்பட்டுள்ளதா – பணியிட நிலைமை மற்றும் செல்லும் பாதை பாதுகாப்பாக உள்ளதா – உபகரணத்தின் திறன் (Capacity) இந்த பணிக்கு போதுமானதா		
5	**பணியாளர்கள் அல்லது பொருட்கள் மீது மோதல் ஏற்படாமல் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.**	• உபகரணத்தை நகர்த்தும் முன், அதைச் சுற்றியுள்ள பகுதி ஆபத்துகள் இல்லாமல் உள்ளதா என்பதை சரிபார்க்கவும் (எ.கா., 360° சுற்றி ஆய்வு செய்தல்). – உபகரணத்தை பின்நோக்கி இயக்க வேண்டியிருந்தால், அதற்கு மாற்று வழிகள் உள்ளனவா என்பதை முதலில் மதிப்பீடு செய்யவும். • பின்நோக்கி இயக்கும்போது பயன்படுத்தப்படும் எச்சரிக்கை அலாரங்கள் (Audible Warnings) சரியாக செயல்படுகின்றன. • Flagger / Spotter / Ground Guide, ஆபத்து பகுதிக்கு வெளியே பாதுகாப்பான இடத்தில் இருந்து பின்நோக்கி இயக்கத்தை கணகாணிக்கிறார். – வேலை தொடங்கும் முன், Operator உடன் தெளிவான சைகை முறைகள் (கை சைகைகள், வானொலி, அவசர நிறுத்த சைகைகள்) ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன. • பணித் திட்டத்தின்படி தேவையான தடுப்புகள் (Physical Barriers) அமைக்கப்பட்டுள்ளன. – நகரும் உபகரணங்களிலிருந்து பாதுகாப்பான தூரம் நிர்ணயிக்கப்பட்டு, அந்த பகுதிக்கான நுழைவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பு: • Flagger / Spotter / Ground Guide பயன்படுத்தும் முன், அவர்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துகள் மதிப்பீடு செய்யப்பட்டு, தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.பயிற்சி பெற்ற நபர்கள் மட்டுமே இந்த பணியை செய்ய வேண்டும் அல்லது கேமரா, அருகாமை எச்சரிக்கை சென்சார் (Proximity Sensor) போன்ற தொழில்நுட்ப வசதிகள் பயன்படுத்தப்பட வேண்டும்.		

6	**நகரும் உபகரணங்கள் மற்றும் சுமைகள் எதிர்பாராத விதமாக நகராதபடி தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.**	• முடிந்தவரை, உபகரணங்கள் சமமான தரையில் நிறுத்தப்பட்டுள்ளன. • நகரும் வாய்ப்பு இருந்தால், சக்கரங்களுக்கு தடுப்பு கட்டைகள் (Wheel Chocks) வைக்கப்பட்டுள்ளன. • Boom, Attachment மற்றும் பிற இணைப்பு உபகரணங்கள் கீழிறக்கப்பட்டுள்ளன அல்லது பாதுகாப்பாக நிலைநிறுத்தப்பட்டுள்ளன. • உபகரணம் பயன்படுத்தப்படாத நேரங்களில், அதன் சாவி (Key) அகற்றப்பட்டுள்ளது.		

இந்த கட்டுப்பாடுகள் / பாதுகாப்புகள் நடைமுறையில் உள்ளனவா மற்றும் வேலையைத் தொடங்குவதற்கு முன்பு சரிபார்க்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்தவும். ஏதாவது மாற்றம் ஏற்பட்டால் நிறுத்தி உதவியை நாடுங்கள்.

	அச்சிடப்பட்ட பெயர் மற்றும் பொறுப்பு	கையொப்பம்	தேதி
வேலை தொடக்க சரிபார்ப்பாளர்			

நகரும் வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் அருகில் வேலை செய்யும் பணி (Work Around Mobile Equipment

